அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 12/2005 (V)

எனது இல.: EST/7/04/INS/1010

அரசாங்க நிர்வாக மற்றும்

முகாமைத்துவ அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2015.11.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**வரவு செலவுத் திட்டம் 2005 இல் முன்மொழியப்பட்டவாறு அரச அலுவலர்களுக்கான புதிய காப்புறுதித் திட்டம் (அக்ரஹார) ஒன்றை உருவாக்குதல்**

2005.05.18 ஆம் திகதிய 12/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்பால் தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது. இணைப்பு (I) இன் பகுதி I மற்றும் பகுதி II என்பன 2015.12.01 ஆம் திகதியிலிருந்து அமுலிலிருக்குமாறு பின்வரும் விதத்தில் திருத்தப்பட்டுள்ளன. அதற்கிணங்க, 2015.12.01 ஆம் திகதிக்குப் பின்னரான நிலமைகள் தொடர்பில் காப்புறுதி நன்மைகளுக்கான உரிமைக் கோரிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது இத் திருத்தப்பட்ட எல்லைகள் பிரயோகிக்கப்பட வேண்டும்.

**இணைப்பு (I)**

**பகுதி I – மருத்துவக் காப்புறுதித் திட்டம்**

| | நன்மை வகை | எல்லை |
|---|---|---|
| 01 | வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையக் கட்டணங்கள் | ரூபா. 30,000.00<br><br>(நாள் ஒன்றுக்கு ரூபா. 3,000/- படி அறைக் கட்டணங்கள்) |

| | | |
|---|---|---|
| 02 | வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் விசேட சிகிச்சைக்கான அத்துடன், மருத்துவ நிபுணர் அதேபோல சத்திர சிகிச்சை நிபுணரின் பரிந்துரைகளின் பேரில் விசேட சிகிச்சை தாதிச் சேவை மற்றும் சிகிச்சை நிலைய சிகிச்சை என்பவற்றுக்கான மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை செலவினங்கள் மற்றும் மயக்க மருந்தாளர் கட்டணங்கள் | ரூபா. 50,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 03 | வைத்தியசாலை அல்லது சிகிச்சை நிலையம் ஒன்றில் உள்ளக சிகிச்சையினையினை பெற்றுக்கொள்ளும் போது அங்கீகரிக்கப்பட்ட நிபுணர் அல்லது மருத்துவ சேவைகள் கட்டளைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிபுணர் ஒருவரின் பரிந்துரையின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மருத்துவ ஆலோசனைச் சேவைகளுக்கான அல்லது நிபுணத்துவ வைத்தியர்கள் சேவைகளுக்கான கட்டணங்கள் | ரூபா. 20,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 04 | அதிதீவிர சிகிச்சை, எக்ஸ் கதிர் மற்றும் இரேடியம் சோதனைகள் மற்றும் சிகிச்சை, மின் நோய் மாற்றுகை (electrotherapy), இயன்முறை மருத்துவம் (physiotherapy) உள்ளடங்கலான நிபுணரின் சேவைகளுக்கான கட்டணங்கள் | ரூபா. 20,000.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |
| 05 | மேலே 01 இலிருந்து 04 வரையான நன்மைகளுக்கு உரித்துள்ள ஒரு ஆள் தனது வாழ்க்கையினைக் காத்துக்கொள்ள ஒரு பாரதூரமான நிலமையில் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அல்லது சிகிச்சை நிலையத்துக்கு அவசரமாக தனது வதிவிடத்திலிருந்து நீங்கப்பட வேண்டியிருக்கும் நிலமையிலான பிரயாணச் செலவினங்கள் | ரூபா. 1,500.00<br>(குடும்ப அலகு ஒன்றுக்காக) |

| | | |
|---|---|---|
| 06 | மேலே 01 இலிருந்து 05 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட நிலமைகளில்<br><br>(அ) ஒரு தனித்த நிலமைக்கான ஆகக்கூடியது<br><br>(ஆ) ஒரு தனித்த ஆண்டுக்கான ஆகக்கூடியது | ரூபா. 120,000.00<br><br>ரூபா. 150,000.00<br><br>(வாழ்க்கைத் துணையும் அரச சேவையிலிருப்பின் அவர்கள் இருவரும் ரூபா. 300,000.00 கொண்ட நன்மைக்கு உரித்துடையவராவர்) |
| 07 | இத் திட்டத்தின் உறுப்பினர்களுக்கு மட்டும்<br><br>(இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட கண் நிபுணர் ஒருவரின் பரிந்துரையின் பேரில் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை மாத்திரம் மூக்குக் கண்ணாடிகள் பெற்றுக்கொள்வதற்காக. | ரூபா. 3,500.00 |
| 08. | உறுப்பினரையும் உள்ளடக்கிய குடும்ப அலகானது அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் அல்லது ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றில் மருத்துவக் கூடம் ஒன்றில் உள்ளக சிகிச்சையினையினை பெற்று வருபவர்களானால் அவர்களுக்காக | ரூபா. 5,000.00<br><br>(நாள் ஒன்றுக்கு ரூபா. 500/-) |
| 09. | I. சாதாரண குழந்தைப் பேறு அல்லது இயற்கையான கருச்சிதைவு ஒன்றுக்காக ஓர் தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படின் வாழ்நாளில் ஆகக் கூடியது இரு சந்தர்ப்பங்கள்<br><br>II. சாதாரண குழந்தைப் பேறு அல்லது இயற்கையான கருச்சிதைவு ஒன்றுக்காக ஓர் அரசாங்க வைத்திய சாலையில் அனுமதிக்கப்படின் வாழ்நாளில் ஆகக் கூடியது இரு சந்தர்ப்பங்கள்<br><br>III. சிசேரியன் மகப்பேற்றுக்காக ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படின் வாழ்நாளில் ஆகக்கூடியது இரு சந்தர்ப்பங்கள் | நாள் ஒன்றுக்கு ரூபா. 2,000/- படி ஆகக்கூடியது 05 நாட்களுக்கு<br><br>ஆகக்கூடியது 05 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபா. 500/- படி<br><br>ரூபா. 40,000.00 |

| | | |
|---|---|---|
| 10. | I. பின்வரும் இருதய சத்திர சிகிச்சைச் செலவினங்களினை மீளளித்தல் – உறுப்பினர்களுக்கு மட்டும் (ஆகக்கூடியது)<br>1. Heart Attack – (Myocardial Refraction)<br>2. Coronary Artery Disease (Coronary by-pass Surgery)<br>3. Stroke (Cerebra Vascular accident)<br>4. Double (Mitral & Aortic) Valve Replacement<br>5. Atrial Septal Defect<br>6. Percutancous Transluminal Coronary Angioplast (PTC)<br>7. Fallot Tetrology<br>8. Bruganda Syndrome<br>9. Implanting Pacemaker – Single<br>10. Implanting Pacemaker – Double<br>11. Mitral Valve Replacement | ரூபா. 500,000.00 |
| | II. RF Ablation<br>உறுப்பினர்களுக்கு மட்டும் (ஆகக்கூடியது) | ரூபா. 225,000.00 |
| | III. (அ) பின்வரும் சத்திர சிகிச்சைகளுக்காக, உறுப்பினர்களுக்கு மட்டும்<br>1. Cancer<br>2. Kidney Transplant | ரூபா. 200,000.00 |
| | (ஆ) பின்வரும் சத்திர சிகிச்சைகளுக்காக,<br>உறுப்பினர்களுக்கு மட்டும்<br>3. Reanal Failure<br>4. Major Organ Transplant, such as lung or bone marrow. However, this benefit will not be paid to a donor of a major organ.<br>5. Paralysis<br>6. Multiple Sclerosis<br>7. Primary pulmonary Arterial Hypertension<br>8. Fulminant Hepatitis | ரூபா. 150,000.00 |

| | | |
|---|---|---|
| | IV. இருதய சத்திர சிகிச்சைச் செலவினங்களினை மீளளித்தல் – குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டும் | ரூபா. 100,000.00 |
| 11 | கேட்டல் உபகரணங்கள் – (குடும்ப உறுப்பினர்களுக்காக) | ரூபா. 50,000.00 |

<u>குடும்ப அலகு</u>

திருமணமான ஊழியர்கள் :- உறுப்பினர், வாழ்க்கைத் துணை மற்றும் வேலையில்லாத, திருமணமாகாத மற்றும் தங்கிவாழும் 21 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் அத்துடன் 21 வயதுக்கு மேற்பட்டிருப்பினும் முழுமையாக இயலாத, திருமணமாகாத மற்றும் வேலையில்லாத பிள்ளைகள்.

திருமணமாகாத ஊழியர்கள் :- உறுப்பினர் மற்றும் 70 வயதுக்குக் கீழ்ப்பட்ட அலுவலரின் பெற்றோர்கள்.

**பகுதி II**

<u>தனியாள் விபத்து மற்றும் இயற்கை மரணக் காப்புறுதித் திட்டம்</u>

ஓய்வூதியத்துக்குரித்துள்ள அரச சேவை மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள சகல நிரந்தர அலுவலர்களும் நாளின் 24 மணித்தியாலமும் இக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் காப்புச் செய்யப்படுவர்.

**நன்மைகள்**

I காப்புறுதி காப்பீடு - நாள் ஒன்றின் 24 மணித்தியாலமும்

II ஆகக்கூடிய வயதெல்லை - 60 வயது வரை

III காப்புறுதி செய்யப்பட்ட தொகை - ரூபா. 600,000.00
விபத்து ஒன்றின் காரணமான மரணம் அல்லது நிரந்தர இயலாமை ஏற்படும் பட்சத்தில் காப்புறுதி செய்யப்பட்ட தொகையானது தங்கி வாழ்வோர்களுக்கிடையே பிரிக்கப்படும்.

IV சென்மதித் தொகை - ரூபா. 600,000.00

| | | |
|---|---|---|
| **அ.** | **நிரந்தர இயலாமை**<br>விபத்து ஒன்றின் விளைவாக ஏற்படும் மரணம் அல்லது நிரந்தர முழு இயலாமை நிலமையில் | காப்புறுதி செய்த மொத்த தொகை |
| **ஆ.** | **நிரந்தர பகுதிசார் இயலாமை**<br>ஒரு கால், கண், கை இழப்பு | காப்புறுதி செய்த தொகையில் 50% |
| **இ.** | **தற்காலிக முழு இயலாமை**<br>ஐம்பத்திரண்டு (52) வார காலப்பகுதிக்கு | வாரம் ஒன்றுக்கு ஒன்றுக்கு ரூபா 500/- வீதம் |
| **ஈ.** | **தற்காலிக பகுதிசார் இயலாமை**<br>ஐம்பத்திரண்டு (52) வார காலப்பகுதிக்கு | வாரம் ஒன்றுக்கு ஒன்றுக்கு ரூபா 300/- வீதம் |
| **உ.** | **இயற்கை மரணம் ஒன்றுக்கு** | ரூபா.150,000.00 |

03. இச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/. ஜே. தடல்லகே

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு